RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22s541

# திராவிட அழகியல் மரபில் கி. ராஜநாராயணன்

**வெ. மாணிக்கபூபதி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, பாரதிதாசன் கலை அறிவியல் கல்லூரி, ஈரோடு-638116, தமிழ்நாடு, இந்தியா

# Rajanarayanan in the Dravidian Aesthetic Tradition

**V. Manickaboopathi** [a, *]

[a] Department of Tamil, Bharathidasan College of Arts & Science, Erode-638116, Tamil Nadu, India

* Corresponding Author: manickaboopathi25@gmail.com

Received: 13-07-2021
Revised: 15-06-2022
Accepted: 01-07-2022
Published: 25-08-2022

Check for updates

## ABSTRACT

The tradition of Dravidian ideology encompasses a variety of material and historical implications. None of the literary and artistic activities emerge in isolation, but rather from the folds of history and social upheavals, and history has two sides. Which side we stand on has to do with our mental system and cultural understanding. The 2,000-year-old Tamil tradition has been influenced by various kinds of literature that support the foundations of Dravidian philosophy. Jain Buddhism, which was once very strong in the Tamil community, took materialism to the fore. They classified human beings on the basis of their actions. When we look closely at the lines such as 'Ittar Periyor idathor izhikolathor (Those who helped others are great those who ignored others are inferior)," etc., they did not discriminate on the basis of birth but were defined on the basis of morality. The question of whether the concept of Dravidianism has reached the youth properly in today's time is very important. This is because there is an increasing tendency to project Dravidianism against Tamil nationalism. The Tamil tradition is the rational tradition, and the knowledge tradition of the Siddhas is presented as the Dravidian tradition. Therefore, Dravidianism should be matched with Tamil. The word Dravidian acts as a link to Tamil Nadu. The Dravidian will be the weapon to defeat the conspiracy to alienate the people who have accepted the dignity of the Tamil land. On that basis, this article attempts to link the aesthetic elements of Ki.Ra., which recorded the lives of the Telugu-speaking people, with the Dravidian elements.

**Keywords:** Ki Ra, Ki Rajanarayanan, Dravidian ideology, Dravidian elements

## முன்னுரை

இருபதாம் நூற்றாண்டினை கோட்பாடுகளின் நூற்றாண்டாக அடையாளப்படுத்தலாம் நவீனத்து வளர்ச்சியும் உலகப் போர்களின் தாக்கமும் புதிய கோட்பாடுகளின் உருவாக்கத்திற்குத் துணைநின்றது இனவரைவியல் மானிடவியல் மெய்யியல் போன்ற துறைகள் இலக்கியத்தோடு இணைத்துப் புரிந்து கொள்ளப்பட்டது தொடக்ககால நவீனத்துவவியலாளர்கள் இனவரைவியலை அடர்த்தியான கதைசொல்லும் முறைக்குப் பயன்படுத்தினார்கள் (Tamizhavan, 2012). அதே வேளையில் இனவரைவியல் மற்றும் தேசிய உணர்ச்சிகளின் விளைவாக சோவியத்யூனியன் போன்ற பொதுவுடைமை அமைப்புகள் சிதைவுக்குள்ளானது என்றாலும் இனக்குழு எழுத்துக்கள் தனித்த அழகியலை உருவாக்கியது அவ்வெழுத்துக்களில் இடப்பெயர்வுகளும் குலக்குறியியலும் தொன்மங்களும் நிரம்பி வாசிப்பில் புதிய அனுபவத்தை உருவாக்கியது இந்தப் பிண்ணனியில் கி.ரா தெலுங்கு பேசும் மக்களின் வாழ்க்கையை அறிவியலும் கல்வியும் எவ்வாறு மாற்றியமைத்தது என்பதை தனது கதைகளில் பதிவுசெய்துள்ளார் பகுத்தறிவுமரபையும் இனக்குழு மரபையும் கி.ரா இணைக்கும் விதம் முக்கியமான ஒன்று அவருடைய

கோபல்லபுரம் புதினத்தில் புதிய கலப்பைகளைச் செய்து பார்க்கும் சம்சாரிகளைப்பற்றியக் குறிப்புக் காணப்படுகிறது. வெள்ளைக்காரர்களை கோபல்லபுரம் மகிழ்ச்சியாக ஏற்றுக்கொள்ளவதாகக் கி.ரா குறிப்பிடுகிறார். வழக்கமான இனவரைவியல் எழுத்துக்களில் நவீனத்துவத்துவத்துவத்தை எதிர்க்கும் மனநிலை இருக்கும் ஆனால் கிரா விதிவிலக்கு (Rajanarayanan, 1998). நவீனத்துவத்தை கிரா முன்னேற்றத்தின் பங்காளியாக எண்ணுகிறார்.

## கி.ரா. வின் திராவிட இனவரைவியல்

இனவரைவியல் எழுத்துக்களை எழுதுவதில் எழுத்தாளர்களுக்கு அபாரமான நடுநிலைதேவைப்படுகிறது கொஞ்சம் தவறினாலும் அது சாதிய எழுத்தாக மாறிவிடும் கிரா இதனை நேர்மையாக அணுகுகிறார் மேலும் தனது எழுத்துக்களின் மூலம் தமிழ் இனவரைவியல் அழகியலை உருவாக்குகிறார் அவரது எழுத்துக்களில் உள்ள பல்பரிமாணத்தின் காரணமாக அது திராவிட இனவரைவியலாகவும் உருவாகிறது (Rajanarayanan, 1998).

## கி.ரா. வின் சமூகவியல்

கி.ரா. வின் புதினங்களிலும் கதைகளிலும் இடம்பெற்றுள்ள பெரும்பாலான கதாபாத்திரங்கள் அறத்தின் குறியீடாகவே வருகின்றன அல்லது ஏமாறக்கூடிய மனிதர்கள் கூட மிகவும் வெள்ளந்தியாக எளிதில் ஏமாறக்கூடிய மனிதர்களாக இFருக்கிறார்கள் கோபல்லபுரம் புதினத்தில் தொடக்கத்தில் இடம் பெரும் காட்சி எண்ணற்ற குறியீடுகளை உள்ளடக்கியது. கணவனுடன் கோபித்துக்கொண்டு கம்மாவார் சமூகத்தைச் சேர்ந்த ஒரு பெண் வீட்டைவிட்டு வெளியேறிவிடுகிறாள் பாதையில் தனியாக நடந்து வருகிற பொழுது தண்ணீர் தாகமெடுத்த காரணத்தால் கண்மாய்க்குள் இறங்குகிறாள் அங்கு இருக்கும் கள்வன் நீருக்குள் அமிழ்த்திக் கொல்கிறான்.

இக்குற்றத்தைச் செய்த கள்வனை கழுவில் ஏற்றிக்கொல்கின்றனர் மேலும் மனைவியை இழந்த ஆசாரியாருக்கு ஊர் மக்கள் ஆதரவாக இருக்கிறார்கள் இறந்து போன பெண்ணின் மனது அமைதியடையவேண்டி தண்ணீர் பந்தல் அமைக்கின்றனர். வழக்கமான இனவரைவியல் எழுத்துக்களில் காணப்படும் வன்முறை கி.ரா. வின் எழுத்துக்களில் காணப்படுவதில்லை அதற்கான காரணம் வேற்று மொழிச்சூழலில் இருந்து தமிழகத்திற்கு வந்த இனக்குழு என்பதால் இங்குள்ள மக்களிடம் பகைமை பாரட்டுவதை தவிர்க்கவே விரும்புவர் மேலும் அவரது எழுத்துக்களில் இடம் பெறுகின்ற விவசாயம் சார்ந்த வாழ்வியல் அங்குள்ள நியாயம் வழங்கும் முறைமைகள் ஆகியவை அறத்தின் அடிப்படையில் அமைந்த ஒன்றாக உள்ளது. உடல் உழைப்புப் பிண்ணனி கொண்ட மக்கள் திரளைப் பற்றிக் குறிப்பிட வருகிற பொழுது கிரா நிலத்தின் இயல்புகளையும் பொருத்திக் காட்டுகிறார். அவர் கதைகளில் கதாப்பாத்திரங்களே கதை சொல்வது போல் அமைந்துள்ளது தனிச்சிறப்பானது ஆகும் இது புதினத்தின் சமூகச் சூழ்நிலையையும் வாசகர்களுக்குப் புரிய வைத்துவிடுகிறது (Rajanarayanan, 1998).

## குடும்பம் - நிலம் - மனித உறவுகள்

கி.ரா வின் புகழ்பெற்ற சிறுகதையான குடும்பத்தில் ஒருநபர் என்ற கதை வீட்டில் இருக்கும் மாடான புல்லை இறந்துவிடுவது பற்றியது. கிராமங்களில் கால்நடைகளின் இறப்பு என்பது குடும்ப உறுப்பினர்களின் மறைவைப் போன்றது. அதிலும் பசுமாடுகளின் இறப்பு பல்வேறு பொருளாதார இழப்புகளையும் கொண்டு வரக்கூடியது. உழவுமாடு இறந்து போனால் விவசாயத்தையும் பாதிக்கும் கி. ரா இதனை மட்டும் பதிவுசெய்வதோடு நின்று விடுவதில்லை. அந்த மாட்டிற்கும் தங்களுக்குமான உணர்வுப்பூர்வமான பிரியத்தையும் மாடு மனிதர்கள் குடும்பம் என அனைத்தும் ஒன்றுடன் ஒன்று பிணைந்து வாழ்வதையும் வலியுறுத்துகிறார். மாட்டின் இறப்பிற்கு அடிப்படைக் காரணம் கால்நடை மருத்துவரை உடனடியாக அழைத்துவர முடியாமல் போவதுதான். கிராமங்களில் உள்ள நாட்டு வைத்தியம் மாட்டை பாதுகாக்க உதவவில்லை.

கி.ரா வின் கன்னிமை சிறுகதை இன்றளவும் பேசப்படும் கதையாக உள்ளது. நாச்சியாரம்மா இளம்வயதில் திருமணத்திற்கு முன்னர் இருந்த இயல்பிற்கும் திருமணத்திற்குப் பின்னர் அவளிடம் ஏற்படும் மாற்றங்களையும் அழகான பதிவாக எடுத்துரைக்கிறார். திருமணத்திற்கு முன்னர் கூலியாட்களுக்கு வயிராற உணவு பரிமாறிய நாச்சியாரம்மா திருமணத்திற்குப் பின் அவர்கள் உண்ணும் உணவில் கணக்குப் பார்கிறாள் திருமணத்திற்கு முன்னர் இருந்த அந்த உணர்வுநிலையை கி. ரா கன்னிமைப் பண்புகள் என்று வரையறை செய்கிறார். கன்னிமை மற்றும் அதுசார்ந்த நினைவுகள் குறிப்பிட்ட காலம் வரை மட்டுமே நிற்கக்கூடியது. அதன்பின்னர் எவ்வளவுதான் அதனைப் பற்றிய கனவுகளைக் கண்டாலும் நம்மால் அதனை திரும்ப உருவாக்க முடிவதில்லை (Rajanarayanan, 2006).

## அமைப்பும் அதிகாரமற்ற மனிதர்களும்

கி. ரா வின் கரிசல்காட்டு கடுதாசி தொடங்கி அவரது சிறுகதைகள் வரை எளிய விவசாயிகளுக்கு அரசு அதிகாரிகளுக்குமான அதிகார முரண்பாடுகளை அதிக அளவில் பதிவு செய்துள்ளார். அதில் அவருடைய மாயமான் சிறுகதை முக்கியமான ஒன்றாகும். இக்கதையில் வருகிற அப்பாவுச் செட்டியர் தினமும் கோவில்பட்டிக்குச் சென்று தனது கடைக்கான பொருட்களைக் கொள்முதல் செய்வதோடு நாட்டு நடப்புகளையும் தெரிந்துகொண்டு வந்து ஊருக்குள் இருப்பவர்களிடம் சொல்லுகிறார். இவ்வளவு விவரமான அப்பாவு அரசாங்கம் தந்த கடனை நம்பி தனது வயலில் கிணறு வெட்ட முடிவுசெய்கிறார். அதன் விளைவாக கடனாளியாகி தனது நிலத்தையே இழக்கும் நிலைக்கு உள்ளாகிறார். இதில் அதிகாரிகளைச் சரிகட்டிப் பணத்தை வாங்குவதற்குச் செட்டியார் படாதபாடுபடுகிறார் நூறு ரூபாய் அதிகாரிகளுக்குப் போய்விடுகிறது “ஒருநபர் மூலம் உண்மை பளிச்சென்று தெரிந்தது வருத்தப்பட்டு என்ன செய்ய? செட்டியார் அதற்குப் பணிந்தார். பணிந்ததுதான் தாமதம் காரியங்கள் கிறுகிறென்று நடந்தது. இப்பொழுது செட்டியர் ரூபாயைத் தேடிச்செல்லவில்லை. ரூபாய் செட்டியாரைத் தேடி வந்தது! ஆனால் எண்ணிப் பார்க்கையில் அவருடைய கைக்குக் கிடைத்தது ரூபாய் முந்நூறு தான். நிம்மதியாகத் தனது புஞ்சை நிலத்தில் விளைவதை வைத்து வாழ்ந்து வந்த குடும்பம் அரசாங்கம் கிணறு வெட்டுவதற்காக தருகிற ரூபாய் நானூறை நம்பி பணியைத் தொடங்கி கடன் நெருக்கடிக்குள்ளாகிறார். 1950 களில் கிராமத்தில் விவசாயம் என்பது மழையை நம்பியதாகவே இருந்தது. கிணறு வெட்டுவதை வாழ்நாள் இலக்காகக் கொண்டு உழைப்பார்கள் ஆனால் அரசு நானூறு ரூபாய் தருகிறது என்பதற்காக கடன் வாங்கும் செட்டியார். இரண்டாயிரம் ரூபாய்க்கு கடனாளியாகி நிலத்தை இழந்து விடுகிறார். இதுபோல் விவசாய மின்சாரத்திற்குக் கட்டணம் இருந்த காலக்கட்டங்களில் விவசாயிகள் அடைந்த துயரங்களைக் கி. ரா பல கதைகளில் பதிவு செய்துள்ளார். கி. ரா இதற்காக இரண்டு என்ற தனிச் சிறுகதையையே எழுதியுள்ளது குறிப்பிடத்தக்கது (Rajanarayanan, 1998).

## கி.ரா கதைகள் வெளிப்படுத்தும் தத்துவம்

நாம் நவீனக் கோட்பாட்டு யுகத்தில் திராவிடம் என்பதைப் பல்வேறு பொருண்மைகளில் உள்வாங்கிக் கொள்கிறோம். மொழியியல் ஆய்வாளர்கள் சமஸ்கிருத மொழிக் குடும்பத்திற்கு எதிர்நிலையில் வைத்து திராவிட மொழிக் குடும்பம் என்று வரையறை செய்கிறார்கள். அரசியல் தளத்தில் எடுத்துக் கொண்டால் ஆரியப் பண்பாட்டிற்கு எதிர்நிலையில் வைத்து திராவிட பண்பாட்டின் சிறப்புகளை முன்வைக்கிறார்கள். கி. ரா வை திராவிட அழகியல் தன்மை கொண்ட எழுத்தாளராக முன் வைக்கவும் இத்தகைய காரணங்களே உள்ளன. அவருடைய கதைகளில் வரும் மனிதர்கள் அனைவரும் கரிசல்காட்டில் உழைத்தும் பல்வேறு பொருளாதார நெருக்கடிகளில் சிக்குண்டும் வாழக்கூடியவர்கள் வழிவழியாக வரும் இனக்குழு மரபுகளைத் தாண்டி உழைப்பு அதனால் விளையும் முன்னேற்றம் என்பதையே முக்கியமான அளவுக்கோலாகக் கொள்கிறார்கள். எனவேதான் கி. ரா வின் கதைகளில் அனைத்து சமூக மக்களின் தொழில்களும் அவற்றுக்கேயுரிய தனித்தன்மை வாய்ந்த அழகியலுடன் பதிவு செய்துள்ளனர். எனவே அவரின் கதைகளில் ஆன்மீக அனுபூதிகளைக் காணஇயலாது. சிற்றிதழ்க் காலக்கட்டத்தில் தமிழ்ச் சமூகத்திற்கு துளியும் தொடர்பேயில்லாத போலி

ஆன்மீக மனச் சாய்வுகளையும் அமானுஷ்யங்களையும் தமிழ்ச் சமூகத்தின் அடையாளமாக முன்வைத்து சில எழுத்தாளர்கள் எழுதினர். அவர்களின் எழுத்துக்களில் தமிழ் மண்ணின் மாண்புகள் இடம்பெறவில்லை. உடல் உழைப்பு மனிதர்கள் அவர்களுடைய கதைகளில் ஆன்மா அற்றவர்களாக வந்துபோயினர். வீட்டைவிட்டு வெளியேறி அலைவது கோயில் பிரகாரத்தில் அமர்ந்து வெறித்து நோக்குவது போன்ற குறியீடுகள் திரும்பத் திரும்ப நவீனச் சிறுகதைகளில் இடம்பெற்றது இந்தப் பண்பாட்டிற்கு எதிர்நிலையில் நின்று தனது கதைகளை எழுதினார் (Rajanarayanan, 1998).

கி.ரா. வின் வேலையே வாழ்க்கை என்ற கதை உழைப்புச் சமூகம் வேலையை எவ்வளவு இயல்பாகக் கையாள்கிறது என்பதனை அழகாகப் பதிவுசெய்கிறது." பருத்திமார் முடியினால் தொழுவைத்தூத்த ஆரம்பித்தார். தூத்த சாணியை அள்ளிப் பெரியக்கூடையில் வைத்தார். அந்தக் கைகளைத் தொழுவின் கல்தூணில் தேய்த்துத் துடைத்துவிட்டு... பழைய கோணிச்சாக்கை நாலாக மடித்து தலையில் போட்டுக்கொண்டார். கெங்கம்மா வந்து சாணிக் கூடையைக் கூடப்பிடித்து தலையில் தூக்கிவிட்டார் (Rajanarayanan, 1998). இக்கதை உழைப்பைக் கொண்டாடுகிறது உழைப்பில் இருந்து தப்பியோடுவதை மெய்யியலாக முன்வைக்கும் எழுத்துக்களில் இருந்துகி. ரா வேறுபடும் இடம் இதுதான். கோழிக்கூப்பிட எழுவது தொடங்கி பொழுது அடையும் வரை உழைப்பு விவசாயத்தைப் பற்றிய சிந்தனையைத் தவிர வேறு எதுவும் இருப்பதிலை. ஆண்களுக்கு இணையாகப் பெண்களும் கடுமையான உடல் உழைப்பைச் செலுத்துகிறார்கள் மாடு தண்ணீர் கட்டுவது, பால் கறப்பது, குழந்தைகளுக்க சோறூட்டுவது, வேளாண் வேலைகளைச் செய்வது என அனைத்திலும் அந்த வீட்டுப் பெண்களின் உழைப்பு இரண்டறக் கலந்து இருக்கிறது "கூட்டில் அடையவந்த கோழிகளுக்குத் தவிடு போட்டுப் பிசைந்து கம்மஞ்சோற்றை வைத்தாள். நாய்க்கு சோறு போடப்பட்டு, கறவை மாடுகளில் பால் கறந்தார், பூனைக்கு பாலும் சோறும் கலந்து வைத்தாள், குழந்தைகளைக் குளிப்பாட்டி, புருஷனுக்கு முதுகில் அழுக்குத் தேய்த்துவிட்டு, வேலைக்காரர்களுக்கெல்லாம் சோறு படைத்து, பிச்சைக்காரர்களுக்கும் போட்டு யாவரும் உண்டு படுத்த பிறகு" (Rajanarayanan, 1998). இந்தமேற்கோள் இன்னமும் நீண்டு செல்கிறது கி. ரா வின் கதைகள் உழைப்பைக் கொண்டாடும் கதைகள் வெறும் வாய் வேதாந்தத்தை அறவே ஒழித்து உழைப்பு அதனால் விளையும் மகிழ்ச்சி ஆகியவற்றை கி.ரா பிரதானப்படுத்துகிறார். அதன் காரணமாகவே திராவிட அழகியலுக்கு கி.ரா வளம் சேர்க்கிறார்.

## முடிவுரை

கி.ரா. கதைகளில் வெளிப்படும் மெய்யியல் உழைப்பை அடிப்படையாகக் கொண்டது. எனவே இடைக்காலங்களில் இருந்த வறண்ட மன வறட்சியான இருண்மைக் கதைகளை கி. ரா எழுதவில்லை இதனைத் திராவிடவியலுக்கு கிரா வின் கொடையாகக் குறிப்பிடலாம். மேலும் தெலுங்கு பேசும் மக்களின் வாழ்வியலைப் பதிவு செய்வதின் மூலம் புதிய வளமைகளை தமிழ் உலகத்திற்கு வழங்கியுள்ளார் அதனால் கி.ரா. வை திராவிட இனவரைவியலின் முன்னோடியாகக் குறிப்பிடலாம்.

## References


Rajanarayanan, K. (1998) Ki. Rajanarayanan Kadhaikal, Agaram, Chennai, India.

Rajanarayanan, K. (2006) Gopalla Gramam, Kalachuvadu Publications, Chennai, India.

Tamizhavan (2012) Dravida Tamil Desam Kadhaiyadal, Adaiyalam Pathippagam, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License